| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **20/07/2024** | முதல் | **24/07/2024** |
| | அறிக்கை எண் : | **058/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/07/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.07.2024 முதல் 18.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/07 | 15/07 | 16/07 | 17/07 | 18/07 | தேதி | நாள்-1 20/07 | நாள்-2 21/07 | நாள்-3 22/07 | நாள்-4 23/07 | நாள்-5 24/07 |
| 0.0 | 0.2 | 0.9 | 0.1 | 0.3 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 36 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 26 | 26 | 25 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 28 | 28 | 28 |
| 6 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 6 |
| 70 | 84 | 63 | 75 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 58 | 58 | 58 |
| 53 | 83 | 55 | 55 | 56 | | 54 | 54 | 55 | 55 | 55 |
| 16 | 6 | 12 | 10 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 25 | 22 | 20 | 15 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 25 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(19ஜூலை-01 ஆகஸ்ட் 2024):

### மழைப்பொழிவு :

19-07-2024 - 25-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

26-07-2024 - 01-08-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-8-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-08-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 25 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி, புடலங்காய், வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு வேலைகளுக்கு தயார் ஆகும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நெல், செண்டு மல்லி, கால்நடை.**

**நெல்:**

நெல் பயிரைத் தாக்கும் குருத்து ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது. இவ்வகை ஈக்களின் தாக்குதலால் நெற்பயிரில் மஞ்சள் கலந்த வெள்ளை நிற நீளவாட்டு கொப்புளங்கள் துளையுடன் காணப்படும்.

இலைகள் சுருங்கி பயிர்கள் வளர்ச்சி குன்றியும், இளம் இலைகளின் நுனிப்பகுதி கீழ்ப்புறமாக தொங்கியும் காணப்படும்.

வயல்களில் மாற்று சார்பு செடிகளை அகற்ற வேண்டும், பரிந்துரைக்கப்பட்ட சாம்பல் சத்து உரத்தை இடவேண்டும்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 350 மில்லி என்ற அளவில் புப்ரோபெசின் என்ற பூச்சிக்கொல்லியை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

செண்டு மல்லி பூ பயிரில் சிவப்பு சிலந்தி பூச்சிகள் பரவலாக தென்படலாம். இப்பூச்சிகள் செடிகளின் இலைகள் மற்றும் பூக்களிலிருந்து சாற்றிணை உறிஞ்சும். சேதம் அதிகமாகும் போது பூக்கள் காய்ந்து விடும்.

இதனைக் கட்டுப்படுத்த புரோபர்கைட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1½ மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையால் தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க, 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

இந்த மருந்து வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கண்டிப்பாக உள்ளே கொடுக்க கூடாது.